**நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் (சிறைச்சாலை அலுவல்கள் பிரிவின்) இலங்கை திட்டமிடல் சேவையின் நிறைவேற்று சேவை வகுதியின் தரம் 1 ஐச் சேர்ந்த பதவி**

மேலுள்ள பதவிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை திட்டமிடல் சேவையின் / நிறைவேற்று சேவை வகுதியின் தரம் 1 ஐச் சேர்ந்த அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒன்றாகும்.
சேவையின் / சேவை வகுதியின் தரம் 1 ஐச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் ஏழு வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ள சேவையின் / சேவை வகுதியின் தரம் 11 ஐச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் பதவியில் முழு நேர அடிப்படையில் கடமையாற்றுவதற்கு நியமனம் செய்ய கவனத்தில் கொள்ளப்படுவார்கள்.
அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடடிக்கைமுறை விதிகள் 121 இற்கு உட்பட்டு, சந்தர்ப்ப ரீதியாக நியமனம் செய்யும் செல்லுபடியான காலத்தை தொடர்ந்தும் நீடிப்பதற்கும் வாய்ப்புள்ள வகையில், கடமைகளை நிறைவேற்ற நியமனம் செய்வது ஒரு தடவைக்கு உச்சளவாக ஒரு வருட காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் வகையில் மேற்கொள்ளப்படும்.
விண்ணப்பதாரிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய மாத்திரம் தயார் செய்து கொள்ளும் தமது விண்ணப்பப்படிவங்களை, செயலாளர், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,கொழும்பு 10 எனும் முகவரிக்கு 2023 மார்ச் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்ககூடிய வகையில் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

தாமதமாகிக் கிடைக்கின்ற, பூரணமற்ற மற்றும் உரிய மாதிரிப்படிவத்திற்கு அமைய தயார் செய்யப்படாதுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**02. தகைமைகள்**

**2.1 அனுபவம் மற்றும் தொழில்சார் தகைமைகள்**

i. புனர்வாழ்வளிப்பு அல்லது நீதித்துறையில் ஆகக் குறைந்தது 03 வருட அனுபவத்தைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.
ii. சமூகவியல், சமூக வேலைகள், கருத்திட்ட முகாமைத்துவத் துறைகளில் பட்டப் பின் படிப்பு தகைமையைப் பெற்றிருத்தல்.
iii. ஆங்கில மொழித் தேர்ச்சி

**2.2 சக்திகள்**

i. திட்டங்களை தயார் செய்து கொள்ள முடியுமாதல் வேண்டும் என்பதுடன் நல்ல முறையில் ஆயத்தமாக இருத்தல் வேண்டும். காலத்தினை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வதற்கு மற்றும் விளைதிறனை உச்சளவாக்கிக் கொள்வதற்கு எல்லாச் சந்தர்ப்பத்திலும் ஊக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.
ii. அனைவர் மத்தியிலும் காணப்படுகின்ற வாய்ப்பை அவதானிப்பதற்கு, முன்னேற்றத்திற்கு மற்றும் அபிவிருத்தியை நோக்கி அவர்களை ஊக்குவிப்பதற்கும் முடியுமாதல் வேண்டும்.

## 2.3 நடத்தைசார் திறமைகள்

i. ஒருவரின் வகிபாகம் நிறுவனத்தின் நோக்கங்களுடன் பொருந்தும் முறை மற்றும் அதற்கு உதவும் முறையை புரிந்துகொள்வதற்குள்ள ஆற்றல்.
பரந்தளவில் சேவை முன்னுரிமைகளை இனங்காணல் மற்றும் வேலை நடவடிக்கைகள் தேசத்தின் தேவைக்காகும் என்பதை உறுதிப்படுத்தல்.

ii. தமக்கு, ஏனையவர்களுக்கு மற்றும் பொதுவாக நிறுவனத்திற்கு தொடர்ச்சியான கற்றல் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தும் ஆற்றல்.

## 3.0 தெரிவு செய்து கொள்ளும் முறை -

உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைய சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் நேர்முகப் பரீட்சையின் போது சேவை முதுமை மற்றும் திறமையை மதிப்பீடு செய்து தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் தெரிவு செய்து கொள்ளப்படுவார்கள். சுருக்க பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

## 3.1 புள்ளி வழங்கும் நடைமுறை

| தலைப்பு | உச்சளவான புள்ளி | மதிப்பீடு செய்யும் முறை |
|---|---|---|
| சேவை முதுமை<br>சேவை முதுமைமிக்க தகைமைவாய்ந்த விண்ணப்பதாரிக்கு உச்ச புள்ளியைப் பெற்றுக் கொடுத்து ஏனைய விண்ணப்பதாரிகளின் சேவை முதுமைக்கு அதற்கு விகிதாசார அடிப்படையில் புள்ளி வழங்கப்படும் | 50 | விண்ணப்பப்படிவத்தின் தகவல்கள் / நேர்முகப் பரீட்சை |
| புனர்வாழ்வளிப்பு அல்லது நீதித்துறையின் அனுபவம் | 20 | |
| தொழில்சார் தகைமை /ஆராய்ச்சி மற்றும் நவீனமயப்படுத்தல் | 10 | |
| சமூகவியல், சமூக வேலைகள், கருத்திட்ட முகாமைத்துவத் துறையில் பட்டப் பின் தகைமை *<br><br>அ. ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட பட்டப் பின் படிப்பு – 7 புள்ளி<br>ஆ. பாடநெறிகளை அடிப்படையாகக் கொண்ட பட்டப் பின் படிப்பு – 6 புள்ளி<br>இ. பட்டப் பின் டிப்ளோமா – 4 புள்ளி<br>ஈ. பட்டப் பின் சான்றிதழ் - 2 புள்ளி | | |
| 2. புனர்வாழ்வளிப்பு, நீதி, மனித உரிமைகள், குற்றவியல் துறையில் பயிற்சி *<br><br>அ. 03 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் - 1 புள்ளி | | |

| | | |
|---|---|---|
| ஆ, 10 நாள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் - 0.5 புள்ளி<br>இ. 03 நாள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் - 0.2 புள்ளி | | |
| 4. ஆங்கில மொழித் தேர்ச்சி *<br>அ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் /அரச பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட டிப்ளோமா / IELTS (Academic)<br>மொத்த புள்ளி 6.5 அல்லது அதற்கு மேல், TOEFL – IBT 79அல்லது அதற்கு மேல்,TOEFL – CBT 213அல்லது அதற்கு மேல், - 02 புள்ளி | | |
| ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது அரச பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி பற்றிய சான்றிதழ் - 01 புள்ளி<br>* அடையாளப்படுத்தப்பட்டுள்ள தலைப்பின் கீழ் உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும். | | |
| சக்திகள்<br>விளைதிறன்மிக்கவாறு மேற்கொள்ள வேண்டிய மற்றும் அவ்வாறு செய்வதற்கு விண்ணப்பதாரியின் விருப்பம் உள்ள விடயம். மேலே 2.2 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு | 10 | நேர்முகப் பரீட்சை |
| நடத்தைசார் திறமைகள்<br>விளைதிறன்மிக்கவாறு மேற்கொள்ள வேண்டிய பணி மற்றும் செயற்பணிகள். மேலே 2.3 பிரிவில் குறிப்பிடப்பட்டள்ளவாறு | 10 | |

குறிப்பு 1 – மேலுள்ள புள்ளி வழங்கும் முறையில் ‘‘அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம்’’ என்பதன் மூலம் இலங்கை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகம் ஒன்று கருதப்படும்.

குறிப்பு 2 - மேலுள்ள புள்ளி வழங்கும் முறையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பட்டப் பின் படிப்புத் தகைமைகளும் இலங்கை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகங்களிலிருந்து பெற்றுக் கொண்ட தகைமைகளாக இருத்தல் வேண்டும் என்பதுடன், பல்கலைக் கழகம் அல்லாத பட்டமளிப்பு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள அவ்வாறான தகைமைகள் மேற்படி ஆணைக்குழவினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

செயலாளர்,

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

திகதி …………….

## மாதிரி விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பம் செய்யும் பதவி
2. விண்ணப்பதாரியின் விபரம்
   I. பெயர்
   II. தேசிய அடையாள அட்டை இலக்கம்
   III. வயது
   IV. வசிக்கும் முகவரி
   V. தொலைபேசி இலக்கம்
   VI. மின்னஞ்சல் முகவரி
   VII. சேவையின் தரம்
   VIII. சேவைக்கு நியமனம் பெற்ற திகதி
   IX. தற்போதைய தரத்திற்கு பதவி உயர்வு பெற்ற திகதி
   X. பதவிப் பெயர்
   XI. தற்போதைய பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திகதி
   XII. அமைச்சு
   XIII. திணைக்களம்

   (வேறு தகவல்கள் அவசியமாயின் குறிப்பிடவும்.)

3. தற்போதைய தரத்தின் சேவை பற்றிய தகவல்கள்

I. சம்பளமற்ற /அரைச் சம்பளத்துடனான லீவு

| முதல் | வரை | முழுமையான காலம் (ஆண்டு / மாதம் /திகதி) | லீவு பெற்றுக் கொண்ட காரணம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

II. வினைத்திறன் காண் தடை

| வினைத்திறன் காண் தடை | சித்தியடைய வேண்டிள்ள திகதி | சித்தியடைந்த திகதி | வினைத்திறன் காண் தடையிலிருந்து விலக்களிக்கப்பட்ட /நிவாரணம் வழங்கப்பட்ட கடிதத்தின் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

III. ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்பட்டிருப்பின்

| குற்றப்பத்திரிகையின் இலக்கமும், திகதியும் | ஒழுக்காற்று கட்டளை (ஒழுக்காற்று கட்டளை இதுவரை விடுக்கப்படவில்லை எனின் அது பற்றிக் குறிப்பிடுக) | தண்டனை அமுலுக்குவரும் திகதி (அதாவது தவறு மேற்கொள்ளப்பட்ட திகதி) | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகள் 186 (II) இற்கமைய திருப்திகரமான சேவைக் காலத்தை கணிப்பீடு செய்யும் போது நீக்கப்படும் காலம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

4. அனுபவம்

4.1 சேவைக்கு நியமனம் செய்யப்பட்ட திகதி முதல் அனுபவம்

| பதவி | அமைச்சு /திணைக்களம் /நிறுவனம் | கால எல்லை | | பதவியின் கடமைகள் மற்றும் பொறுப்பின் தன்மை சுருக்கமாக |
|---|---|---|---|---|
| | | முதல் | வரை | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

4.2 குறித்த விடயத்தில் பெற்றுக் கொண்டுள்ள அனுபவம் (கடமைகளை பொறுப்பளிக்கும் கடிதங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்.)

| பதவி | அமைச்சு /திணைக்களம் /நிறுவனம் | கால எல்லை | | பதவியின் கடமைகள் மற்றும் பொறுப்பின் தன்மை சுருக்கமாக |
|---|---|---|---|---|
| | | முதல் | வரை | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

4.3 தாங்கள் சிறைச்சாலைகள் மறுசீரமைப்புத் துறையில் பெற்றுக் கொண்டுள்ள அறிவை வெற்றிகரமாக பயன்படுத்திக் கொண்டு தீர்த்துவைத்துள்ள சவால்மிக்க சிக்கலொன்றை விபரிக்குக. (உச்சளவாக 150 சொற்கள்)

5. தொழில்சார் தகைமைகள் (உரிய சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)

5.1 பட்டப் பின் தகைமை

| பட்டப் பின் தகைமை | பாடம் | பல்கலைக் கழகம் / நிறுவனம் | தகைமை செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

5.2 பயிற்சி

| பயிற்சி | நிறுவனம்/ அமைப்பு | கால எல்லை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

5.3 மொழத் தேர்ச்சி

| மொழி | தகைமை / நிறுவனம் / அமைப்பு | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

எனது அறிவுக்கு அமைய மேலுள்ள சகல தகவல்களும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

…………………………

விண்ணப்பதாரியின் கையொப்பம்